SURESH' IAS ACADEMY




# 07.06.2026 செய்திகள்

## மறுசுழற்சி செய்யப்பட்ட ராக்கெட் பாகத்தில் விண்வெளியில் காராமணி செடியை வளர்த்து இஸ்ரோ சாதனை

» பி.எஸ்.எல்.வி. சி-60 ராக்கெட்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா, சதீஸ்தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து கடந்த 2024-ம் ஆண்டு டிசம்பர் 30-ந் தேதி இரவு 10 மணி 15 வினாடிகளில் பி.எஸ்.எல்.வி. சி.60 ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.
- விண்ணில் செயற்கைக்கோள்களை ஒன்றாக இணைக்கும் நவீன தொழில் நுட்ப அறிவு அதாவது "விண்வெளி டாக்கிங் பரிசோதனை" செய்யப்பட்டது. ஸ்பேடெக்ஸ்-பி செயற்கைக்கோள் 475 கிலோ மீட்டரிலும், 15 நிமிடம் 20 வினாடிகளில் ஸ்பேடெக்ஸ்-ஏ செயற்கைக்கோள் 476 கிலோ மீட்டரிலும் திட்டமிட்ட இலக்கில் நிலை நிறுத்தி சோதிக்கப்பட்டது.

» காராமணி செடி

- இது தவிர ராக்கெட்டின் இறுதி பகுதியான விண்வெளிக் குப்பையாக கருதப்படும் ராக்கெட்டின் பயன்படுத்தப்பட்ட 4-ம் கட்டத்தை, இஸ்ரோ பி.எஸ்.4 சுற்றுப்பாதை பரிசோதனைக் கலம் (போயம்) எனப்படும் ஒரு சுற்றுவட்ட ஆய்வகமாக மறுபயன்பாடு செய்தது.
- மறுசுழற்சி செய்யப்பட்ட ராக்கெட் பாகமான இதில், பயிர் விளைய வைக்கும் ஆய்வுக்காக 8 காராமணி விதைகளை விண்ணுக்கு அனுப்பினர். பூமியில் இருந்து விஞ்ஞானிகள் தொலை அளவியல் மற்றும் தொலைக் கட்டுப்பாட்டுத் தொடர்பு இணைப்புகள் மூலம் இந்த விண்வெளிப் பண்ணையைத் தொலைவிலிருந்து கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் செய்தனர்.

» விஞ்ஞானிகள் பெருமிதம் :

- தற்போது அதில் 5 காராமணி விதைகள் வெற்றிகரமாக முளைத்து, நுண்குருத்துவத்தில் 2 இலைகள் கொண்ட நிலைக்கு வளர்த்து இஸ்ரோ சாதனை படைத்துள்ளது. இந்த திருப்புமுனை, உயிரி-மீளுருவாக்க உயிர் ஆதரவு அமைப்புகளை உருவாக்குவதில் ஒரு முக்கியமான முதல் படியைக் குறிக்கிறது.
- எதிர்காலத்தில் இந்தியா திட்டமிட்டுள்ள விண்வெளி நிலையமான, "பாரதிய அந்த ரிக்ஷ் நிலையம்" மற்றும் அதற்கு அப்பால் செல்லும் நீண்ட கால பயணங்களில் விண்வெளி வீரர்களுக்கு புதிய உணவு மற்றும் ஆக்ஸிஜனை வழங்குவதற்கு இந்த ஆய்வு வெற்றி முக்கிய பங்கு வகிக்கும். விண்வெளியில் நாட்டின் முதல் தாவரங்களை இந்தியா வெற்றிகரமாக வளர்த்துள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் பெருமிதமாக கூறினர்.

## வரலாறு படைத்தார் பிரக்ஞானந்தா

- நார்வே செஸ்போட்டியின் இறுதிச் சுற்றில் சிறப்பாக ஆடிய இந்திய வீரர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். இதன் மூலம் கௌரவமிக்க இப்போட்டியில் பட்டம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சிறப்பைப் பெற்றார்.
- நார்வே நாட்டின் தலைநகர் ஆஸ்லோவில் தலைசிறந்த செஸ் வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற நார்வே செஸ்போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்று ஆடுவது மிகவும் பெருமை மிக்கதாகும்.
- உலகின் நம்பர் 1 வீரர் நார்வேயின் மாக்னஸ் கார்ல்ஸன் கடைசி சுற்றில் உலக சாம்பியன், இந்தியாவின் டி குகேஷை வீழ்த்தினார்.
- பிபிசாரா அஸ்ஸாபவேயா நடப்பு உலகசாம்பியன் ஜு வென்ஜுனுக்கு எதிராக ஆடிய ஆட்டத்தில் தோல்வி கண்டார். எனினும் புள்ளிகள் அடிப்படையில் பிபிசாரா பட்டம் வென்றார். ஸு ஜினேர் இந்திய வீராங்களை கொனேரு ஹம்பியை வீழ்த்தி இரண்டாம் இடம் பெற்றார்.
- அன்னா முஷிசுக் உலகக்கோப்பை சாம்பியனான இந்தியாவின் திவ்யா தேஷ்முக்கை வீழ்த்தினார். பிபிசாரா 16.5 புள்ளிகள், ஸு ஜினேர் 16 புள்ளிகள், அன்னா முஷிசுக் 15 புள்ளிகளை ஈட்டினர்.